[*2000 மார்ச் 30*

**திரு. எம். ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குன்னூர் மாநகரிலே பழைமை வாய்ந்த ஒரு கட்டடத்திலே நீதிமன்றம் நடந்து கொண்டிருக்கிறது. மழை, வெயில் காலங்களிலும், அதேபோல காற்றுக் காலங்களிலும் அங்கு மக்களுக்கு மிகவும் பெரிய பாதிப்பாக இருக்கிறது. ஆக, 100 ஆண்டுகளுக்கு மேலாகவே அந்த வளாகத்தில் நடந்து கொண்டிருக்கும் நீதிமன்றக் கட்டடத்தைப் புதுப்பித்து, அதே இடத்திலே கட்ட அரசு முன்வருமா? ஏறக்குறைய 2 ஆண்டுகளுக்கு முன்பு, உயர் நீதிமன்ற நீதிபதிகள் கூட அந்த இடத்தை வந்து பார்த்தார்கள். பார்க்கின்ற நேரத்திலே நாங்கள் அத்தனை பேரும் அந்த ஊரிலே இருக்கின்ற எல்லோரும் சேர்ந்து அதே இடத்திலே கட்ட வேண்டும் என்று கூட வற்புறுத்திச் சொன்னோம். ஆக அந்த ஊரின் நிலைமையைக் கருதி மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவும், வழக்குகளுக்கு வருகின்ற வழக்கறிஞர்கள் அத்தனை பேருக்கும் பாதுகாப்பு அளிக்கும் வகையிலும் அந்த நீதிமன்றத்தைப் புதுப்பித்துத் தர அரசு முன்வருமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நீதிமன்றத்தின் பதிவாளரிடத்திலேயிருந்து 24-11-1998-ல் ரூ.1.16 கோடி மதிப்பில் வளாகம் அமைப்பதற்கான பரிந்துரை வந்திருக்கிறது. அரசு அதனுடைய தேவையை உணர்ந்திருக்கிறது. ஆனால் நிதி நெருக்கடியின் காரணமாகத் தற்போது அதைச் செயல்படுத்த முடியவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 157, திரு. ப. கோவிந்தன், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**157—**

### சத்துணவுக் கூடம்

***14803—திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

*2000 மார்ச் 30*]

*(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, பெரியேரி ஊராட்சி வகுத்தலூர் மற்றும் தானம்பூசாரி வளவில் சத்துணவுக்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) இல்லை.*

*(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.*

**திரு. ப. கோவிந்தன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாரமங்கலம் தொகுதியில் பெரியேரி ஊராட்சி, வகுத்தலூர் மற்றும் தானம்பூசாரி ஆகிய அந்தப் பகுதிகளிலே மிகப் பிற்படுத்தப்பட்ட விவசாயக் குடிமக்கள் வாழ்கின்றனர். அந்தப் பகுதியிலே இருக்கின்ற குழந்தைகளுக்குச் சத்துணவுக் கூடம் ஒன்றை அமைப்பதற்கு, அந்த குழந்தைகளின் நலன் காக்க, நமது அமைச்சரவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சத்துணவு மையம் அமைப்பதற்குக் குறைந்தபட்சம் 3 வயதிலிருந்து 5 வயது வரை உள்ள குழந்தைகள் 25 பேர் இருக்க வேண்டும். மக்கள்தொகை 1000-ஆவது இருக்க வேண்டும். ஆனால் வகுத்தலூர், தானம்பூசாரி வளவுப் பகுதியில் மொத்த குழந்தைகள் 19 பேர் தான் இருக்கின்றனர். ஜனத்தொகை மொத்தம் 500 தான் இருக்கின்றது. ஆகவே அங்கே சத்துணவு மையம் ஏற்படுத்த வாய்ப்பில்லை.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 158, திரு. சீ.வெ. கிருஷ்ணன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.*

**158—**

**கால்நடை மருத்துவமனை**

***30626—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:**

*மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*